**தலைப்பு 332 – தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 332 – தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய சமூக நீரவழங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, இவ் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தேசிய சமூக நீர் வழங்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு | செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்தியின் தொடர்பு |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 11(1) இற்கு இணங்க 2022 ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையின் 1.6.3(அ) | 2022 ஆண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் SA-82 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான அறிக்கையில் ரூபா 74.77 மில்லியன் தொகை பெறுமதியான போக்குவரத்து உபகரணங்களில் அடங்கியிருந்த ரூபா 10.70 மில்லியன் தொகை பெறுமதியான ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான 04 மோட்டார் வாகனங்கள் முறைப்பிரகாரம் உரித்தாக்கி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட வேண்டும் என. | பந்தி 1.6.1(ஆ) |

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) மீண்டுவரும் செலவுகள்

நிதிக்கூற்றுக்களில் உரிய மீண்டுவரும் செலவுகள் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டின் போது போக்குவரத்துச் செலவுக்காக ரூபா 8 மில்லியன் தொகை மற்றும் ஏனைய செலவுகளுக்காக ரூபா 750,000 தொகையாக கூட்டுத்தொகை ரூபா 8.76 மில்லியன் தொகை நி.பி. 66 மூலம் மாற்றப்படல் தொடர்பாக 2023 நவம்பர் 30 திகதிய 05/2023 இலக்கம் கொண்ட அரச நிதி வழிகாட்டலில் உப பந்தி 06 இற்கு இணங்க நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆரம்ப மற்றும் திருத்திய செலவு மதிப்பீட்டிற்கு இடையே முரண்களை காட்டும் கூற்றில் உட்படுத்தியிருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது ஏசீஏ 2(iii) படிவம் சரியாக பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுரைக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### (ஆ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான அறிக்கையில் உட்படுத்தப்பட்டுள்ள ரூபா 73 மில்லியன் தொகை பெறுமதியான போக்குவரத்து உபகரணங்களில் ரூபா 10.70 மில்லியன் தொகை பெறுமதியான ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான 04 மோட்டார் வாகனங்களும் அடங்கியிருந்தன. | இந்த 04 வாகனங்களின் உரிமையுடைய சமூக நீர் வழங்கல் மற்றும் உடலாரோக்கிய செயற்திட்டம் மற்றும் லுனாவ சுற்றாடல் மேம்பாட்டு மற்றும் சமூக அபிவிருத்தி செயற்திட்டம் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், உரிமையை உரித்தாக்குவதற்காக தேவையான ஆவணங்களை | பயன்படுத்தப்படும் ஏனைய நிறுவனங்களுக்குரிய சொத்துக்கள் முறைப் பிரகாரம் உரித்தாக்கிக் கொண்டு நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பெற்றுத் தரும்படி மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 50 தொடர்பாக கவனம் செலுத்தாமல் மதிப்பீடுகள் தயாரித்திருந்த காரணத்தினால் 18 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 12 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் போது அரசினால் வெளியிடப்பட்டிருந்த செலவு முகாமைத்துவ சுற்றறிக்கையின் படி செலவுகள் மேற்கொள்ளலை வரையறுக்கப்படல், அபிவிருத்திச் செயற்திட்டங்கள் திட்டமிட்டவாறு செயற்படுத்துவதற்கு முடியாமல் போதல் மற்றும் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக வெளி வளவாளர்களை பெற்றுக்கொள்ளும் போது ஏற்பட்டிருந்த தாமத்தின் காரணமாக நிதி முன்னேற்றம் குறைந்திருந்தது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க ஏற்பாடுகளின் தேவைப்பாடுகள் அறுதியாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) ஐக்கிய நாடுகளின் அவசர சிறுவர் நிதியம் (UNICEF) மூலம் நாட்டின் உட்பட்டமைப்பு அபிவிருத்திக்காக கிடைத்திருந்த வெளிநாட்டு மாணியத்தின் கீழ் 66 சதவீதம் அதாவது ரூபா 6.6 மில்லியன் தொகை குறிப்பிட்ட கருமங்களுக்காக பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டிருந்தது. இந்த நிதியத்தின் மூலம் கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளில் கணிசமான அளவு ஏற்பாடுகள் வருடாந்தம் சேமிக்கப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டில் சேமிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் ரூபா 2.32 மில்லியன் தொகையாக காணப்பட்டது. | செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக வெளி வளவாளர்கள் பெற்றுக்கொள்ளும் போது ஏற்பட்டிருந்த தாமத்தின் காரணமாக நிதி முன்னேற்றம் குறைந்திருந்தது. அதேபோல் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான செயற்திட்டங்கள் வெளி நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளும் போது செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் ஒன்று மற்றும் 2023 ஆண்டு கொடுப்பனவு செய்வதற்கு பில் பத்திரம் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | வெளிநாட்டு மானியங்கள் என கிடைக்கக்கூடிய பணம் குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காக செலவிடுவதற்காக முகாமைத்துவத்தினால் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சினால் கிராமிய நீர்ச் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 2023 ஆண்டின் போது வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 389 மில்லியனிற்கான ஏற்பாடுகளில் ரூபா 217 மில்லியன் தொகை அதாவது 56 சதவீதம் திணைக்களத்தினால் ஏற்பாடுகள் வழங்கியிருந்த கருமங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதேபோல் அது தொடர்பாக தகவல்கள் ஒதுக்கீட்டுப் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த நிர்மாண வேலை வளவில் ஏற்பட்டிருந்த மண் சரிவு காரணமாக தேசிய கட்டிடங்கள் ஆய்வு நிறுவனத்தின் பரிந்துரை பெற்றுக்கொள்ளும் வரை செயற்திட்டம் தாமதம் அடைதல் மற்றும் அதற்காக பின்னர் அங்கீகரிக்கப்பட்ட புதிய செயற்திட்டங்களினதும் பெறுகை அலுவல்கள் மேற்கொண்ட பின்னர் மதிப்பீட்டுத் தொகையை விட ஏற்பாடுகள் சேமிக்கப்படல். | கிராமிய நீர் செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்படுகின்ற ஏற்பாடுகள் வழங்கப்பட்ட கருமங்களுக்காக பயன்படுத்துவதற்கு முகாமைத்துவத்தினால் பொறுப்புடன் செயற்பட வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு குறிப்பிட்ட காலப்பகுதியில் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்கப்படுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 3.7 பந்திக்கு இணங்க கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கியிருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உரிய விடயங்கள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு பதில் அளிக்க வேண்டி இருப்பதனால் கணக்காய்வில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் பதிலளிப்பதில் தாமதம் காணப்படுகின்றது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வு கடமை உரிய முறையில் செயற்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான செய்முறையொன்று காணப்படுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் 4.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களின் படி அந்த தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கருமங்கள் தற்காலிகமாக நீர் வழங்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக இலங்கை கணக்காளர் சேவை I தர பதவியொன்றென ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு அலுவல்களை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 565(3) | திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்ற வைப்புப் பேரேட்டில் மேற்கூறிய நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க மாதாந்தம் பெறுவனவுகள், கொடுப்பனவுகள் பதிவு செய்து மீதிகளின் பொழிப்பு தயாரித்து தேவையான சரி செய்தல் மற்றும் சீராக்கல்கள் மேற்கொண்டு நாளதுவரையாக பேணிச் சென்றிருக்கவில்லை. | ஒவ்வொரு மாத இறுதியிலும் சமப்படுத்தப்பட்ட கணக்கு பொது வைப்புக் கணக்கில் பதிவு செய்வதற்கு 2024 ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2.5 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 ஜனவரி 05 திகதிய 01/2012 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 3.1 மற்றும் 2021 செப்தெம்பர் 29 திகதிய 01/2021 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 2.1 இற்கு இணங்க திணைக்களத் தலைவர் மற்றும் அந்த பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெயரிடப்படும் பிரதி | 2019 ஆண்டில் செயற்திட்டத்தை செயற்படுத்திய போது கட்டமாக 20 சதவீதம் சமூக பங்களிப்புடன் சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஆண்டு முதல் திணைக்களத்தில் பதிவு செய்துள்ள குறிப்பிட்ட செயற்திட்டத்தின் மூலம் நலன் | முறையான செய்முறை ஒன்று கடைபிடிக்காமல் ஒப்பந்த வேலைகள் வழங்கப்படல் செயற்திட்டங்கள் தோல்வியடைவதற்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமையால் அதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய |

| | | |
|---|---|---|
| நிதிகள் இருவர் அடங்கிய மூன்று நபர்களைக் கொண்ட குழுவொன்றின் மூலம் சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு நீர் வழங்கள் செயற்திட்டங்கள் நிர்மாணிக்கும் ஒப்பந்தவேலைகள் சாட்டப்பட முடியும். அவ்வாறாயினும் மதிப்பீட்டு பெறுமதி கூட்டுத்தொகை ரூபா 48 மில்லியன் தொகைக்கான மாத்தளை மாவட்டத்தின் 05 நீர் செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகள் மாவட்ட நிலையப் பொறுப்பு அதிகாரியின் பரிந்துரையின் மீது சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த 05 நீர் செயற்திட்டங்கள் மூலம் 970 குடும்பங்களுக்கு நீர் வழங்குவதற்காக எதிர்பார்க்கப்பட்ட போதிலும் உண்மையாகவே 377 குடும்பங்களுக்கு மாத்திரமே நீர் தொடர்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த நீரும் சுத்தமான குடிநீர் என உறுதிப்படுத்திய அறிக்கைகள் ஏதும் காணப்படவில்லை. இரண்டு செயற்திட்டங்களின் நிர்மாணிக்கப்பட்ட குழாய் கிணறுகளின் மூலம் போதியளவு நீர் வழங்கள் கிடைக்கப் பெறாமையால் ஏனைய நீர் மூலவளங்களை பயன்படுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | பெறக்கூடிய சமூக அடிப்படை அமைப்புக்கு மாத்திரம் ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டமொன்று திட்டமிடும் போது அந்த பிரதேசத்தில் நீர் தேவைப்பாடு காணப்படும் குடும்பங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் செயற்திட்டம் முடிவடைந்த பின்னர் அனைத்து அங்கத்தவர்களும் ஒரே தடவையில் நீர் தொடர்புகள் பெற்றுக் கொள்ளல் நடைமுறைச் சாத்தியமாக நடைபெறமாட்டாது.<br><br>பூமிக்கு கீழ் நீர் மீது அடிப்படையாகக் கொண்ட குழாய் கிணறுகளின் விஷேடமாக கோடை காலங்களில் நீர் வற்றுதல் ஏற்படுகின்றது. | உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.6 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீர் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ஏனைய நிறுவனங்களிலிருந்து திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்று வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணத்தில் 2023 திசெம்பர் 31 திகதியளவில் 2 வருடங்களை விட மிகையான மீதிகள் ரூபா 30 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களை இனங்கண்டு அந்த மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ள அனைத்து செயற்திட்டங்களினதும் மீதித் தொகை நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க 2024 ஜூன் 30 திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கு மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய சமூக நிர் வழங்கள் திணைக்களம் நிறுவுவதற்கான சட்ட வரைபுக்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்து 9½ வருடங்கள் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் சட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக திணைக்களம் ஆரம்பிப்பதற்கான அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்களை மேற்கொள்வதற்கு திணைக்களத்திற்கு சட்ட பின்னணி ஒன்று காணப்படவில்லை. | சட்டவரைஞர் திணைக்களத்தினால் இறுதி வரைபு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அவதானிப்புக்கள் விரைவாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சட்டத்தை அங்கீகரித்துக் கொள்ளலை விரைவுபடுத்தி திணைக்களத்தின் கருமங்களை முறைப் பிரகாரம் பேணிச் செல்வதற்கு தேவையான சட்டப் பின்னணியொன்று தயாரித்துக்கொள்ள வேண்டும். |

### 3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டின் போது நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த இரத்தினபுரி மாவட்டத்தின் மாதம்பை தெற்கு சமூக நீர் செயற்திட்டத்தின் ரூபா 531,137 தொகை செலவிடப்பட்டு பம்பு நிலையத்திற்காக பக்கச்சுவரொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் பம்பு நிலையம் நிர்மாணிக்கப்படாமையால் அதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை விளைவற்றதாகியிருந்தது. | மாதம்பை தெற்கு கொடகவெல பம்புநிலையம் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த இடம் மண் சரிவு ஏற்படக் கூடியதாக இருந்தமையால் அதற்காக பக்கச்சுவர் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. | செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்து நலன்பெறும் குடும்பங்களுக்கு நீர் வழங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இரத்தினபுரி மாவட்டத்தில் பலங்கொட, பெல்மடுள்ள, அயகம மற்றும் மாதம்பே ஆகிய பிரதேங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 05 செயற்திட்டங்களில் நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 1.4 | பலங்கொட விகிலியவத்த சமூக அடிப்படை நீர்த் திட்டத்தின் கூரை மிக உயரமாக காணப்பட்டமையால் அளவை அலுவல்கள் சரியாக மேற்கொள்வதற்கு முடியாமல் போனதுடன் பின்னர் அளவைகள் சரியாக மேற்கொண்டு இறுதி | நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக கொடுப்பனவுகளை சான்றுபடுத்திய பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தருக்கு எதிராக தேவையான ஒழுக்காற்று |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் தொகை மிகைக் கொடுப்பனவு செய்து அரச பணத்தை துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்தது. | பில் பத்திரத்தின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது என. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | திணைக்களம் ஆரம்பித்தல் தொடர்பான 2014 மார்ச் 13 திகதிய 17/2014 இலக்கங் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் இலக்கம் 614 : 2013 கொண்ட ‘‘குடிநீருக்கான விவரக் குறிப்பு’’ இணங்க நீர் தரப்பரிசோதனை ஒன்று மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் பௌதீக கணக்காய்வு பரிசோனையின் போது படி 2019 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 92 நீர் வழங்கும் செயற்திட்டங்களில் 12 செயற்திட்டங்களின் நீர் தரப் பரிசோதனை மேற்கொண்டு இருக்காததுடன் 2023 செப்தெம்பர் அளவில் 05 செயற்திட்டங்களில் இறுதியாக நீர் பரிசோதனை 04 வருடங்களுக்கு முன்னரே நடைபெற்றிருந்தது. அதே போல் 08 செயற்திட்டங்களில் ஒரு வருடத்திற்கு முன்னரும் 06 செயற்திட்டங்கள் 2 வருடங்களுக்கு முன்னரும் 08 செயற்திட்டங்களில் 03 வருடங்களுக்கு முன்னரும், நீர் தரப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் 28 செயற்திட்டங்கள் மாத்திரம் நீர் தரப்பரிசோதனை 2023 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் மூலம் நீரின் பண்புசார் தன்மையை பரிசோதனை செய்வதற்காக வருடாந்தம் இலவசமாக 02 நீர் மாதிரிகள் பரிசோதனை செய்தல், புதிய கூறுகள் அடங்கிய சிறிய அளவிலான 17 ஆய்வுகூடங்கள் நிறுவப்பட்டு சலுகை முறையில் நீர் மாதிரிகளை பரிசோதனை செய்வதற்காக வசதிகள் வழங்கப்பட்டிருத்தல், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் அனைத்து சமூக அடிப்படை அமைப்புக்களை தற்போது அறிவுருத்தப்பட்டு மற்றும் பயிற்சி வழங்களும் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் விஷேட வழிகாட்டல் தொகுப்பு தற்போது வெளியிடப்பட்டுள்ளது. | பொதுமக்களுக்கு சுத்தமான நீர் வழங்குவது திணைக்களத்தின் முக்கிய பணிப்பொறுப்பாக காணப்படுவதனால் அதற்காக அறிமுகப்படுத்தியுள்ள செய்முறையொன்றை சிறந்த கண்காணிப்புடன் பேணிச் செல்ல வேண்டும். |
| (ஈ) | உலக வங்கி உதவியின் கீழ் நீர் வழங்கள் மற்றும் துப்பரவு ஏற்பாட்டை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் ரூபா 50 மில்லியன் பெறுமதியான 17 சிறிய அளவிலான ஆய்வுகூடங்கள் (Mini Labs) திணைக்களத்திற்கு வழங்கப்பட்டு 10 மாவட்டங்களில் பொருத்தப்பட்டிருந்த போதிலும் இரசாயனப் பொருட்கள் காணப்படாமை, பெட்டரி | உலக வங்கி உதவியின் கீழ் வழங்கப்பட்டிருந்த 17 நீர் ஆய்வுகூடங்களில் திணைக்களத்திற்கு கிடைத்திருந்தது 11 ஆய்வுகூடங்கள் மாத்திரமே. அந்த நீர் ஆய்வுகூடங்களில் இரத்தினபுரி, மொனராகலை, நுவரெலிய, பொலன்னறுவ மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களுக்கு | இந்த உபகரணங்களின் குறைபாடுகளை இனங்கண்டு தேவையான திருத்த வேலைகள் மேற்கொண்டு சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படாமை போன்ற காரணங்களினால் அவற்றில் 07 ஆய்வுகூடங்கள் செயற்படு நிலைமையில் காணப்படாததுடன், அவற்றில் 2 நீர் ஆய்வு கூடங்கள் தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு மற்றும் பதுளை பிரதேச சபைக்கு சாட்டப்பட்டிருந்தது. | வழங்கியிருந்த நீர் ஆய்வு கூடங்கள் செயற்படு நிலையில் காணப்படுகின்றது.<br><br>கேகாலை மாவட்டத்திற்கு வழங்கியிருந்த இரண்டு ஆய்வுகூடங்களில் உடுகொட நீர் ஆய்வுகூடம் தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், கொடியாகும்புர நீர் ஆய்வுகூடம் மாத்திரம் செயற்படாமல் காணப்படுகின்றது. பதுளை மற்றும் குருநாகல கும்புக்கெடே நில்தியவர சமூக அடிப்படை அமைப்புக்கு வழங்கப்பட்டிருந்த நீர் ஆய்வுகூடம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | |
| (உ) | புத்தளம் மற்றும் கேகாலை மாவட்டங்களில் கூட்டுத்தொகை ரூபா 26.6 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 செயற்திட்டங்களில் ஒரு செயற்திட்டத்தின் குழாய் கிணற்றில் மணல் நிரம்பியிருந்த காரணத்தினால் மற்றும் 02 செயற்திட்டங்களில் ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட நீர் மூலவளம் கோடை காலத்தில் வற்றுதலுக்கு உள்ளாவதனால் மாற்று முறைகள் பயன்படுத்தி நீர் வினியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த மாற்று மூலவளங்களை தெரிவு செய்யும் போது நீர் சுத்தமான குடிநீர் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கவில்லை. கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைக்கு ஆளாக்கிய நீர் தரப் பரிசோதனை அறிக்கையின் படி பயன்பாட்டிற்கு பொருத்தமற்றது என உறுதிப்படுத்தப்பட்டிருந்த 11 ஏனைய செயற்திட்டங்கள் மூலம் 1,518 நலன்பெறு குடும்பங்களுக்காக குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. | கோடை காலத்தில் அனேகமான சிறு அளவிலான நீர் செயற்திட்டங்களில் அடிக்கடி இவ்வாறான நிலைமை ஏற்படுவது சகஜமாகும். இவ்வாறு இனங்காணப்பட்ட சிக்கல்கள் தொடர்பாக அமைச்சு மற்றும் திணைக்களத்தின் ஏற்பாடுகளின் கீழ் நீர் வள சபையுடன் இணைந்து வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டது.<br><br>குருநாகல், ஹம்பாந்தோட்டை, புத்தளம் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டிருந்த 07 செயற்திட்டங்களின் மூலம் வழங்கப்படுகின்ற நீரின் பண்புசார் தன்மை குறைவாக தன்மை காணப்படுவதால் நீரை சூரேற்றி குடிப்பதற்கும் க்ளோரீன் மயமாக்குவதற்கும் கம்பஹா மற்றும் களுத்துரை மாவட்டங்களில் நீரின் பண்புசார் தன்மையை மேம்படுத்துவதற்காக பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்பட்ட காரணத்தினால் அரசிற்கு நட்டம் ஏற்படுவது போலவே அந்த விடயம் உரிய நியமத்துடன் நிறைவேற்றப்படாமையால் நலன்களை எதிர்பார்க்கும் பொது மக்களின் தேவைப்பாடு நிறைவேற்றப்படாமை தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேலும் UNICEF ஏற்பாடுகளின் மீது 6325 kg க்ளோரீன் தொகை சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது | |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 220 குடும்பங்களுக்காக சுத்தமான குடிநீர் வழங்குவதற்காக ரூபா 7 மில்லியன் மதிப்பீட்டு கிரயத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருந்த மாத்தளை மாவட்டத்தில் ஓபல்கல மெத்சித் நீர் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் 2019 ஆண்டின் போது 04 சமூக நீர் அடிப்படை அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டு செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகளுக்காக ரூபா 7 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 05 குடும்ப அலகுகளுக்கு மாத்திரம் நீர் வழங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2020 ஒக்தோபர் 06 திகதி பொதுமக்களின் உரிமைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஆரம்பம் முதல் சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டது என உறுதி செய்யப்படவில்லை. இதன் மூலம் பெற்றுக்கொண்ட நீர் மாதிரிகளை தேசிய நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபையின் ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்த போது பயன்படுத்தத் தகுதியற்றவை என அறிவிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு பௌதீக பரிசோதனையின் படி இந்த செயற்திட்டத்தின் நிறைவேற்றப்படாத நிர்மாண வேலைகள் மற்றும் பொருத்துக்களுக்காக ரூபா 1.2 மில்லியன் தொகை நிறைவேற்றப்பட்ட வேலைகள் | இது தொடர்பாக மூன்று நபர்கள் குழுவொன்றினால் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு விசாரணை அறிக்கை 2024 மே 10 திகதி உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | கணக்காய்வு அவதானிப்புக்களில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட நட்டம் தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளாமல் கொடுப்பனவு செய்து அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது. | | |
| (ஆ) | சமூக நீர் அபிமானி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2019 ஆண்டின் போது மாத்தளை மாவட்டத்தில் கூட்டுத்தொகை ரூபா 41 மில்லியன் தொகை செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த 04 சமூக நீர் செயற்திட்டங்களில் இரண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த குழாய் கிணற்றிலிருந்து போதியளவு நீர் வழங்கள் ஒன்று பெற்றுக் கொள்ளாமையால் ஏனைய நீர் மூலவளங்களை பயன்படுத்துவதற்கு நேரிட்டிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 2 மில்லியனிற்காக தொகை விளைவற்றுக் காணப்பட்டது. | செயற்திட்டமொன்று திட்டமிடும் போது அப் பகுதியில் நீர் தேவைப்பாடு காணப்படும் குடும்ப எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் செயற்திட்டம் முடிந்தவுடன் அனைத்து அங்கத்தவர்களும் ஒரே தடவையில் நீர்த் தொடர்பு பெற்றுக் கொள்ளல் நடைமுறையில் நடைபெறமாட்டாது. | கணக்காய்வு அவதானிப்புக்களில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட நட்டம் தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டின் போது குருநாகல் மாவட்டத்தில் மொத்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 78 மில்லியனுக்கான 09 சமூக நீர் செயற்திட்டங்கள் நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கைகளுக்கு அணுகியிருந்தது. இந்த ஒப்பந்தக்காரரின் தொழிநுட்ப இயலுமை, இயந்திர உபகரணங்கள் போதியளவாக என மற்றும் முன்னைய அனுபவங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. அதன்படி 2024 பெப்ரவரி மாதம் அளவில் வழங்கப்பட்டிருந்த 09 ஒப்பந்த வேலைகளின் மதிப்பீட்டு பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 51 மில்லியன் தொகைக்கான 06 ஒப்பந்த வேலைகளின் நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டு இணங்கப்பாட்டுடன் ஒப்பந்த | நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி காரணமாக நிர்மாணவேலை பண்டங்களின் விலைகள் அதிக அளவில் கூடியிருத்தல் காரணமாக உடன்பட்டிருந்த கருமங்கள் தொடர்பான ஒப்பந்தக் கம்பனியினால் நிறைவேற்றப்படாமையால் ஒப்பந்தக்காரருடன் அன்னியோனிய இணக்கப்பாட்டின் மீது உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பெறுகை அலுவல்களின் போது ஏற்பட்டிருந்த முறைகேடு தொடர்பாக முறையான விசாரணையொன்று நடாத்த வேண்டியதுடன் அதனூடாக அரசுக்கு ஏதேனும் நட்டம் ஏற்பட்டிருந்தால் அதற்கு பொறுப்புச்சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேலையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்த வேலைக்காக செலவிடப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 38 மில்லியனுக்கான தொகை சிக்கனமற்ற செலவொன்றாக காணப்பட்டது. | | |
| (ஆ) | குருநாகல் மாவட்டத்தில் சந்த திய சமூகஅடிப்படை அமைப்பு மற்றும் ரம்பேவ குடிநீர் செயற்திட்டத்திற்காக ரூபா 15 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 நீர்த் தொட்டிகளின் நிர்மாணவேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2024 மார்ச் அளவில் 3 மாதங்கள் முதல் 15 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து குறிப்பிட்ட நீர்த் தொடர்பினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் இந்த தொட்டிகள் பயன்படுத்தப்படாமல் விளைவற்ற தன்மையை அடைந்திருந்தது. | சந்த திய சமூக அடிப்படை அமைப்பு மற்றும் ரம்பேவ குடிநீர் செயற்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கக் கூடிய அளவில் கட்டங் கட்டமாக நிர்மாணித்தல் அலுவல்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளது. | நிலவுகின்ற ஏற்பாடுகளின் படி செயற்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டியதுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்து பொது மக்களுக்கு நீர் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | குருநாகல் மாவட்டத்தில் 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்ட 19 சமூக நீர் செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு நலன்பெறு மக்களுக்கு குடிநீர் வழங்க முடியாமல் இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 திகதியளவில் அந்த செயற்திட்டங்களில் 14 செயற்திட்டங்களுக்காக ரூபா 106 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதே போல் புத்தளம், திருகோணமலை, மத்தளை, மட்டக்களப்பு மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் 2021 ஆண்டின் போது நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 11 சமூக நீர் செயற் திட்டங்களின் நிர்மாண வேலை அலுவல்களில் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அந்த சந்தர்ப்பத்தில் அச்செயற்திட்டத்திற்காக திணைக்களத்தினால் | வேலைகள் பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்களுக்காக நிதி ஏற்பாடுகள் கிடைக்கக் கூடிய அளவின் படி கட்டங் கட்டமாக நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படவுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்டிருந்த ரூபா 18.6 மில்லியனுக்கான தொகையும் விளைவற்றுக் காணப்பட்டது. | | |
| (ஈ) | அனுராதபுர மாவட்டத்தில் 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது 08 சமூக நீர் செயற்திட்டங்களுக்காக நெனோ சுத்திகரிப்பு இயந்திரங்கள் ரூபா 19 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டங்களில் 03 செயற்திட்டங்களுக்குரிய சுத்திகரிப்பு நிலைய கட்டிடங்கள் 02 வருட காலத்தை விட மிகையான காலம் முதல் நிர்மாண வேலையை பூர்த்தி செய்யப்படாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் படி அதற்காக திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 6.6 மில்லியனுக்கான மொத்தக் கிரயமும் விளைவற்றதாக மாறியுள்ளது. | அனுராதபுர மாவட்டத்தில் 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது 08 செயற்திட்டங்கள் நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டிருந்துடன் அவற்றில் 03 இன் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிர்மாண வேலைகளை விரைவாக பூர்த்தி செய்யும் படி குறிப்பிட்ட நிர்மாண வேலைக் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்யப்பட வேண்டியதுடன் ஒப்பந்தக்காரர்களின் நிதி மற்றும் செயற்பாட்டு சாத்தியக்கூறு தொடர்பாக கவனம் செலுத்தாமல் ஒப்பந்த வேலைகள் வழங்கியிருந்த உத்தியோகத்தருக்கு எதிராக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.5 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 56 மில்லியனுக்கான மாத்தறை, வெலிகம போரம்ப கனங்கே (தெற்கு) சமூக நீர் வழங்கள் செயற்திட்டம் 2019 நவம்பர் 08 திகதி ஆரம்பிக்கப்பட்டு நிர்மாண வேலைகள் 08 பகுதிகளாக பகிரப்பட்டு சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு சாட்டப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் 02 வேலை விடயங்கள் குறிப்பிட்ட நாளுக்கு முன்னர் பூர்த்தி செய்யாமையால் சந்தையின் விலைகள் அதிகரித்ததனால் ஆரம்ப மதிப்பீட்டை விட ரூபா 7 மில்லியன் தொகை மிகையான புதிய மதிப்பீடொன்று தயாரிப்பதற்கு நேரிட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 திகதியளவில் இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 27 | இந்த செயற்திட்டம் தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளும் படி நீர்வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சிடம் வேண்டப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் நிர்மாணவேலைகளை விரைவுபடுத்த வேண்டியதுடன் தாமதம் அடைவதனால் மேற்கொள்ள நேரிடுகின்ற கிரயம் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 4 வருடங்களை கடந்திருந்த போதும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்டதுடன் அதற்காக செலவிடப்பட்டிருந்த பணம் விளைவற்ற செலவொன்றாக மாறிக் கொண்டிருந்தது.

### 3.6 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 10.2 இற்கு இணங்க அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 பந்திக்கு இணங்க அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க சமூக நீர் வழங்கள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் படி அதன் பிரதான கருமங்கள் என இனங்கண்டிருந்த சமூக அடிப்படை அமைப்புக்களுக்காக யாப்புக்கள் மற்றும் உடன்படிக்கைகள் தயாரிப்பதற்காக திணைக்களத்தினால் போதியளவு வேலைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | அனைத்து சமூக அடிப்படை அமைப்புக்களுக்குமாக யாப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அந்த யாப்பின் படி செயற்படுதல் மாவட்ட அலுவல்களின் மூலம் மேற்பார்வை செய்யப்படுகின்றது. | திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு வருகின்ற வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் படி தேவையான செயலாற்றுகை மட்டத்தை நெருங்க வேண்டும். |
| (ஆ) | வரைவு செயலாற்றுகை அறிக்கையின் இணக்க அறிக்கையின் மூலம் இணங்க வேண்டுமென காட்டப்பட்டிருந்த போதிலும் இணங்கியிருக்காத 19 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் திணைக்கள ஏற்பாடுகள் மீது அங்கீகரிக்கப்பட்டிருந்த 482 செயற்திட்டங்கள் என அறிக்கையில் 2.1 இன் மூலமும் மற்றும் 2.1.2 | உங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வரைபு அறிக்கையின் படி இணங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் என காட்டப்பட்டிருந்த இணங்காத சந்தர்ப்பங்களை மீண்டும் பரிசோதனை செய்து சரிசெய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கும் போது சரியான தகவல்கள் உட்படுத்தப்பட வேண்டும். |

இன் மூலமும் அந்த எண்ணிக்கை 382 தொகையென காட்டப்பட்டிருந்தது. அதன்படி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றுகை அறிக்கையில் அடங்கியுள்ள சில விடயங்கள் பொய்யானவை என தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது.

**3.7 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்காமை**

| கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பான விபரம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 திசெம்பர் 04 திகதி வழங்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாவிற்கு 2024 ஏப்ரல் 30 திகதி வரை பதில் அனுப்பியிருக்கவில்லை. | கூடிய விரைவில் பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்காய்வு ஐய வினாக்களுக்காக விரைவாக பதில் வழங்குதல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும். |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஜனவரி 12 திகதிய இலக்கம் DMA/01-2019 இலக்கங் கொண்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பந்தி 03 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 40 இற்கு இணங்க திணைக்களத்தின் அலுவல்கள் தொடர்பாக போதியளவு உள்ளகப் பரிசோதனை ஒன்று ஏற்பட்டிருக்கவில்லை. | இந்த திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் கருமங்கள், தற்காலிகமாக நீர் வழங்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தகைமையுடைய உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்து உள்ளகக் கணக்காய்வு அலகொன்று நிறுவி பரிசோதனை அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 36 பதவிகளில் 18 பதவிகள் உட்பட அனைத்து தொகுதிகளிலும் வெற்றிட எண்ணிக்கை சுமார் 14 சதவீதத்தில் | திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடித மூலம் வேண்டப்பட்டுள்ளது. எனினும், அரசாங்க சேவைக்கு புது | திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு தேவையான பதவியணி பேணிச் செல்வதற்கு தேவையான |

காணப்பட்டது. எவ்வாறாயினும் 72 ஊழியர்களின் மிகையொன்றும், அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 9 ஊழியர்களும் அவதானிக்கப்பட்டது.

ஆட்சேர்ப்புக்கள் வரையறுக்கப்பட்டமையால் உத்தியோகத்தர்கள் இணைத்தல் மேற்கொள்ளப்படவில்லை. மிகவும் அத்தியவசியமான கடமைகளை நிறைவேற்றுவதற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்பட்டது. அதே போல், மிகையாகவுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்காக புதிதாக 50 பதவிகள் ஏற்படுத்தும் படி முகாமைத்துவ சேவைத் திணைக்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள இரசாயனவியலாளர் மற்றும் புவிச்சரித விஞ்ஞானப் பதவி எண்ணிக்கையை திருத்தித் தரும் படி வேண்டப்பட்டுள்ளது.

நடவடிக்கைகள் எடுக்கப்படும்.